# நெல்லிக்குப்பம் நகராட்சி

## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2020–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28–ம் தேதி (28.02.2020) வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள்.1.** தமிழக அரசின் மூன்றாமாண்டு சாதனையை முன்னிட்டு பொங்கல் மலர் - 2019 நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 , 2018–19 மற்றும் 2019– 20ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை விளம்பரம் செய்ததில் “தினமலர்'' நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ .10800/– மற்றும் தினசூரியன் நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ .9600/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 572&573/2019/இ1)**

**தீர்மான எண் : 023. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.2.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்பட்டாம்பாக்கம் கிராமம், வார்டு B , பிளாக் 28 T.S.No. 15/1 , 15/2/1pt இடத்தின் பரப்பு 2.10 சதுரடியாகும். இவ்விடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக அமைந்ததால் மனைப்பிரிவின் உரிமையாளர்கள் திரு .C.ஜெகநாதன் மற்றும் பலர் என்பவர் குடியிருப்பு மனைப்பிரிவினை வரன் முறை செய்ய நகர் ஊரமைப்பு ஆணையருக்கு விண்ணப்பம் செய்ததின் பேரில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் வி.ம. அவர்கள் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண்- R 812/2019 என எண்ணிட்டு குடியிருப்பு மனைப் பிரிவினை கொள்கையளவில் ஒப்புதல் செய்து இந்நகராட்சிக்கு 05.02.2020 ல் வரப்பெற்றுள்ளது. குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்காவினை ரூ.100/– முத்திரை தாளில் தானமாக பெற்றுக் கொள்ளவும், மனுதாரர் கட்டணங்கள் செலுத்தியதும் அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-

கீழ்பட்டாம்பாக்கம் கிராமம், வார்டு B , பிளாக் 28 நகரளவு எண் . 15/1 , 15/2/1pt பரப்பு 2,10 ஏக்கரில் அப்துல் கலாம் குடியிருப்பு மனைப்பிரிவாக கொள்கையளவில் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண் R 812/2019 என எண்ணிட்டு வரப்பெற்றுள்ளது. இதிலுள்ள சாலை மற்றும் பூங்காவினை நகராட்சி ஆணையர் பெயரில் ரூ.100/– முத்திரை தாளில் தானமாக பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மனுதாரர்கள் கட்டணங்கள் செலுத்தியதும் மனைக்கு வரன்முறை உத்திரவு அளிக்கலாம்.

**ந.க.எண்: 386/2020/F1**

**தீர்மான எண் : 024. அலுவலக குறிப்பினை ஏற்று பதிவுசெய்யப்பட்டது .**

**மன்றபொருள்.3** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண் . 326 நாள் . 31.12.2019 ன் படி

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (லட்சம்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் . 28 மேல்பாதி பகுதியில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டுதல் பணி | 28.00 |
| 2 | வார்டு எண் . 15 வாழப்பட்டு பகுதியில் 1.00 இலட்சம் | 28.00 |

| | | |
|---|---|---|
| | லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டுதல் பணி | |

ஒப்பந்தபுள்ளிக்காக 27.02.2020 அன்று மாவட்ட அளவில் தமிழ் நாளிதழ் மற்றும் மாநில ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் விளம்பரம் செய்த வகையில் (வெ.ஆ.எண்.26/ செ.ம.தொ.அ/கடலூர்/நாள் . 25.02.2020) மக்கள் தொடர்பு அலுவலர் , செய்தி மக்கள் தொடர்புதுறை , கடலூர் அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டு மக்கள் குரல் , சென்னை அவர்களுக்கு ரூ.11970/– நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0986 /2020/இ1)**

**தீர்மான எண் : 025. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.4.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியின் பொது நிதியின் கீழ் மன்ற தீர்மான எண் . 022 நாள் . 05.02.2020 ன்படி 10.02.2020 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாயில் ) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக ஈப்பு வாகனம் TN-31/AE 5944 க்கு பழுது பார்த்தல் பணி | 36000/- | ஓம் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் DSN நகர் , காரமணிக்குப்பம் , | ரூ.35990/– |
| | | | விஜியலட்சுமி ஆட்டோமொபைல்ஸ் கடலூர் , | ரூ.38940/– |

<u>அலுவலகக்குறிப்பு : –</u>
1. வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான தொகை ரூ.35990/– விலைப்புள்ளிஅளித்துள்ள ஓம் சக்தி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் , காரமணிக்குப்பம் , அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண் . 570/2020/இ1)**

**தீர்மான எண் : 026. அலுவலக குறிப்பினை ஏற்று குறைவான விலைப்புள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.5..</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் குப்பையினை தரம் பிரித்து துப்புரவு பணியாளர்கள் பெற்று வருகின்றனர்கள். மக்கும் தன்மை கொண்ட கழிவுகளை நுண்ணுயிர் உரமாக்கும் மையத்தில் உரமாக்கல் செய்வதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளப்படுகிறது. மக்காத உலர் கழிவுகளை மேலும் தரம் பிரித்து தனித்தனியே சேகரித்து வாகனம் மூலம் எடுத்து வந்து சரவணபுரம் RRC யில் சேமித்து வைக்கப்படுகிறது. தரம் பிரித்து எடுத்து சென்று மையத்தில் சேமித்து வைத்திட பெரிய அளவு கொண்ட சாக்குகள் தேவைப்படுவதினால், உள்ளுர் மார்க்கெட்டில் 3000 எண்ணிக்கை வாங்குவதற்கு அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.75000/–க்கும் மன்றத்தின் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. உள்ளூர் விலைப்புள்ளி கோரிட மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.3654/2019/எச்1**

**தீர்மான எண் : 027. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.6.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் .11ல் உள்ள திடீர்குப்பத்தில் 14வது மான்ய நிதி குழு திட்டத்தின் கீழ் (2017–18) ரூ.7.80 லட்சத்திற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி நடை பெற்றது . அது சமயம் மேற்படி பகுதியில் மதிப்பீட்டை விட கூடுதலாக சிமெண்ட சாலை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது . எனவே பொது மக்கள் நலன் கருதி கூடுதலாக சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டது . அதற்கு ஆன செலவு ரூ.47000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது . ஒப்பந்ததாரர் M/s . ஜெய் அன்டு கோ , கடலூர் அவர்களுக்கு வருவாய் நிதியிலிருந்து வாங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 3558/2018/இ1)**

**தீர்மான எண் : 028. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.7.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக போடப்பட்ட நகரில் விரிவாக்கப்பகுதிகளில் வீட்டு மனைபிரிவுகள் அரசு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது . மேற்படி பகுதிகளில் வீடுகள் அதிகம் உள்ளது . மேலும் வீட்டு வரி விதிப்பும் விதிக்கப்பட்டுள்ளது . தற்சமயம் கீழ்கண்ட வீட்டு மனை பிரிவுகளில் பல இடங்களில் பொது மக்கள் குடிநீர் வசதி இல்லாமல் உள்ளனர் . எனவே கீழ் கண்ட பகுதிகளில் அங்கீகாரம் பெற்ற மனைப்பிரிவுகளில் குடிதண்ணிர் வசதிக்காக தண்ணீர் விநியோகம் செய்யும் பிரதான மெயின் குழாய் அமைக்கலாம் . இதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ .700000/–க்கு குடிநீர் நிதியின் கீழ் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**(ந.க.எண்.1029 /2018/இ1)**

**தீர்மான எண் : 029. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.8.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியின் 2019–2020ம் ஆண்டிற்கான சொத்துவரி, காலிமனை வரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் நகராட்சியின் கடை வாடகை கட்டணம் ஆகியவற்றின் நிலுவை/ நடப்பு கேட்பு தொகைகளை நகராட்சி. செங்கற்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அவர்களின் அறிவுரையின் படி பொதுமக்கள் நகராட்சியின் கணினி வரி வசூல் மையத்தில் 31.03.2020ம் தேதி முடிய உள்ள காலங்களுக்கு செலுத்தக்கோரி இந்நகராட்சியின் அனைத்து வார்டுகளிலும் பொது மக்கள் நன்கு அறியும் வண்ணம் இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனத்தில் மூலம் விளம்பரசெய்யும்போது குப்பை எடுக்கும் இடத்திற்கு மட்டுமே வாகனம் செல்கிறது. 30 வார்டு பொதுமக்கள் அறியும் வண்ணம் தனியார் வாகனத்தில் விளம்பரம் செய்ய அதற்கு தேவையான மைக்செட், ஆம்பிளிபியர், ஸ்பீக்கர், பேட்டரி ஆகியவற்றை வாடகைக்கு எடுக்கவும் மற்றும் குறுந்தகட்டில் பதிவு செய்து விளம்பரபடுத்திட ஆகும் தோராய செலவினம் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) ஆகும். மேற்படி செலவினை இந்நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வரிவசூல் பணியின் அவசர அவசியம் கருதியும் மன்ற அனுமதியை எதிர்நோக்கியும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண் . 401/2020/A1)**

**தீர்மான எண் : 030. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.9 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக முதன்மை பொறியாளர் , சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.13899/2016/D01 நாள் 27/01/2017 ன் படி 14.02.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஒப்படைப்பு செய்யப்பட்டு 20.02.2020 வரை மூன்றாண்டு காலமாக

பராமரிப்பு பணி செய்யப்பட்டு வந்துள்ளது . 20.02.2020 அன்றுடன் பணிகாலம் முடிவுற்ற நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களிடம் ஒப்பந்தப்புள்ளி கோர Bid Document ஒப்புதல் பெற மூன்று மாதம் கால ஆகும் என்பதால் தற்போது நகராட்சியில் தெரு விளக்குகள் பராமரிப்பு பணி மேற்கொள்ள அவசர அவசியம் கருதி புதிய ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை மேலும் பிப்ரவரி – 2020 10 நாட்கள் , மார்ச்– 2020 , ஏப்ரல் –2020 மற்றும் மே – 2020 ஆகிய மூன்று மாதங்களுக்கு ஏற்கனவே பராமரிப்பு பணி மேற்கொண்ட நிறுவனமான ஸ்ரீ மல்லிகா எலக்ட்ரிகல்ஸ் & எலக்ட்ரானிக்ஸ் , No.1, போலிஸ் லைன் , பண்ருட்டி என்ற நிறுவனம் அதே விலைவிகிதத்தில் செய்ய சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்தத்திற்கிணங்க மூன்று மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்யவும் பராமரிப்பு பணி செலவு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2606/2009/இ1)**

**தீர்மான எண் : 031. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.10 </u>.**நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கழிவறைகள் , சமுதாய கழிவறைகள் மற்றும் பொது கழிவறைகளில் சிறிய பழுதுகள் ஏற்பட்டு கழிவறைகள் உபயோகப்படுத்த இயலாமல் உள்ளது . இதனால் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் . தற்சமயம் பொது மக்கள் நலன் கருதியும் , பொது சுகாதார கேடு ஏற்படாமல் தடுக்கவும் பழுதடைந்த கழிவறைகளை பராமரிப்பு மற்றும் புனரமைப்பு பணிகள் செய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.900000/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

**(ந.க.எண் .1194 /2018/இ1)**

**தீர்மான எண் : 032. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி